**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், செங்கல்பட்டு**

**வழக்கு எண் - O.S.372/2006 P.W.2**

இந்த நீதிமன்றத்து உதவியாளர் திரு.D.கோவர்தனகிரி, என்பவரால் வாக்குமூலம் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதிகள் தரப்பில் சாட்சியின் வாக்குமூலம் 1873-ஆம் ஆண்டு 10வது சட்டத்தின் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர்: பிரபாவதி | தொழில்: |
| த/பெ.: | மதம்: |
| கிராமம்: | ஜாதி: |
| வயது: | வட்டம்: காஞ்சிபுரம் |

**முதல் விசாரணை:** - 13.06.2023

நான் இந்த வழக்கில் நான்காம் வாதி. இந்த வழக்கில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். 1 முதல் 20 ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். அதனை வாதிகள் தரப்பில் குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1. 15.12.1950 தேதியிட்ட ராமானுஜ ஆச்சாரியாரிடமிருந்து கிரையம் பெற்ற கிரைய பத்திரத்தின் பதிவு நகல், வா.சா.ஆ.1.
2. 13.12.2006 தேதியிட்ட பட்டா நெம்பர் 248க்கு செங்கல்பட்டு தலைமை இடத்து துணை வட்டாட்சியர் வழங்கிய 1396ம் பசலி நகல், வா.சா.ஆ.2.
3. 13.12.2006 பட்டா நம்பர் 230க்கு செங்கல்பட்டு தலைமை இடத்து துணை வட்டாட்சியர் வழங்கிய சிட்டாவின் நகல் வா.சா.ஆ.3.
4. 06.07.2006 - 1931 பசலி முதல் 1406 பசலி வரை தாவா வழக்கு சொத்துக்களுக்கு துணை வட்டாட்சியர் வழங்கிய அடங்கல் நகல் வா.சா.ஆ.4.
5. 13.12.2006 - 1408 பசலி முதல் 1415 பசலி வரை தாவா வழக்கு சொத்துக்களுக்கு துணை வட்டாட்சியர் வழங்கிய அடங்கல் நகல் வா.சா.ஆ.5.
6. 05.01.2010 - சர்வே நம்பர் 30/6Fக்கு செங்கல்பட்டு தலைமை இடத்து துணை வட்டாட்சியர் வழங்கிய அடங்கல் நகல் வா.சா.ஆ.6.
7. 10.01.2005 - 1ம் பிரதிவாதி அங்கமுத்துக்கு செல்லம்மாள் எழுதிக் கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.7.
8. 29.12.2004 - 4ம் பிரதிவாதி அம்பிகா 9ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த கிரய பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.8.
9. 26.08.2006 - என்னுடைய தாயார் 1ம் வாதி தன்னுடைய வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிகள் 1 முதல் 4, 7 மற்றும் 8 ஆகியோர்களுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் வா.சா.ஆ.9.
10. 28.08.2006 - 1ம் பிரதிவாதி பெற்றுக் கொண்டதற்கான அஞ்சலக அட்டை வா.சா.ஆ.10.

11. 2ம் பிரதிவாதி பெற்றுக் கொண்டதற்கான அஞ்சலக அட்டை வா.சா.ஆ.11.
12. 3ம் பிரதிவாதி பெற்றுக் கொண்டதற்கான அஞ்சலக அட்டை வா.சா.ஆ.12.
13. 4ம் பிரதிவாதி பெற்றுக் கொண்டதற்கான அஞ்சலக அட்டை வா.சா.ஆ.13.
14. 7ம் பிரதிவாதி பெற்றுக் கொண்டதற்கான அஞ்சலக அட்டை வா.சா.ஆ.14.
15. 8ம் பிரதிவாதி பெற்றுக் கொண்டதற்கான அஞ்சலக அட்டை வா.சா.ஆ.15.
16. 30.08.2006 - 8ம் பிரதிவாதி அனுப்பிய பதில் அறிக்கை வா.சா.ஆ.16.
17. திருவேங்கட முதலியார் பெயரில் பசலி 1385 மற்றும் 1388க்கு பட்டா எண்.15க்காக கொடுக்கப்பட்ட கிஸ்து ரசீது - வா.சா.ஆ.17.
18. 23.03.1981 - பசலி 1389 முதல் 1391 வரைக்கான கிஸ்து ரசீது - வா.சா.ஆ.18.
19. பசலி 1394க்கான கிஸ்து ரசீது - வா.சா.ஆ.19.
20. 02.08.1989 - பசலி 1395 முதல் 1398 வரை பட்டா எண்.230க்கான கிஸ்து ரசீது - வா.சா.ஆ.20.

தாவாப்படி தீர்ப்பா வேண்டுகிறேன்.

<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

(பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

**O.S.372/2006                    P.W.2-பிரபாவதி                    03.01.2024**

**9ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

என் பெற்றோர் பெயர் என்னவென்றால் என் அப்பா பெயர் அர்ஜீன், அம்மா பெயர் சரசு. நடேசமுதலியார் எனக்கு என்ன உறவென்றால் எனது தாத்தா ஆவார். என் அம்மா சரசுவின் அப்பாவிற்கு அப்பா வழி தாத்தா ஆவார். என் அம்மாவின் அப்பா பெயர் என்னவென்றால் திருவேங்கடம். நடேசமுதலியார் எந்த வருடம் இறந்தார் என்றால் எனக்கு ஞாபகமில்லை. நான் எனது வழக்குரையில் பத்தி 4ல் சொல்லியுள்ள நடேச முதலியாரின் வாரிசுகள் என்பதை காண்பிப்பதற்கு வாரிசு சான்றிதழ் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் என்ன படித்துள்ளேன் என்றால் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். சாட்சி மீண்டும் நடேசமுதலியாரின் வாரிசுகள் என்று காண்பிக்க ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்று கூறுகிறார். சரசு, திருவேங்கடத்தின் வாரிசு என்பதை காண்பிக்க ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. எனது வழக்குரையில் அபூர்வம்மாள் வழக்கு சொத்தை பயிர் வைத்து பராமரித்து வந்தார் என்பதை காண்பிக்க ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அபூர்வம்மாள் எங்கு குடியிருந்தார் என்பதை காண்பிக்க ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது வழக்குரையில் தாவா சொத்துக்களை அபூர்வம்மாள் குத்தகைக்கு பல நபர்களுக்கு விட்டிருந்தார் என்று சொல்லியுள்ளதில் 2 நபர்களின் பெயர்கள் சொல்லமுடியுமா என்றால் எனக்கு ஞாபகமில்லை. தாவா சொத்துக்களில் இருந்து இவ்வளவு வருமானம் வந்தது என்பதை காண்பிக்க ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. அபூர்வம்மாள் கடினமாக உழைத்து, சொத்துக்களை பராமரித்து அதிலிருந்து வந்த வருமானத்தை கொண்டு தான் சொத்துக்களை வாங்கினார் என்று சொல்லியுள்ளதில், எந்த வருடம், எந்த சொத்துக்களை வாங்கினார் என்றால் 1950ல் பெருமாட்டுநல்லூரில் அவரது அண்ணன் ராகவாமுதலியாருடன் சேர்ந்து சொத்தை வாங்கினார். 1950ல் வாங்கப்பட்ட சொத்துக்கள் யார், யார் பெயரில் உள்ளது என்றால் ராகவா முதலியார், ராமசந்திரன், சுந்தரமூர்த்தி, நாகலிங்கம், தேவன் ஆகியோர் பெயரில் வாங்கப்பட்டது. எனது வழக்குரையில் பத்தி 9ல் ராகவா முதலியார், ராமசந்திர முதலியார், லோகநாத முதலியார், நாராயணசாமி முதலியார், மோகனரங்க முதலியார்,

துரைசாமி முதலியார், வரதப்ப முதலியார், ரங்கநாத முதலியார், மாரிமுத்து முதலியார் ஆகியோர் பெயரில் இருப்பதாக சொல்லப்பட்டுள்ளது, ஆனால் எனக்கு நடேச முதலியார் வாரிசுகளின் பெயர்கள் மட்டும்தான் தெரியும். 1950ல் வாங்கப்பட்ட கிரய பத்திரத்தில் அபூர்வம்மாள் எவ்வளவு தொகை பங்காக கொடுத்தார் என்று தெரியுமா என்றால் தெரியாது. மற்ற கூட்டு கிரயதாரர்கள் கிரயத்திற்காக எவ்வளவு தொகை கொடுத்தார்கள் என்று தெரியுமா என்றால் தெரியாது. 1950ல் வாங்கப்பட்ட சொத்தின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் ஒரு ஏக்கர் கிரயம் வாங்கப்பட்டது. 1950ல் கிரயம் வாங்கப்பட்ட கிரய பத்திரத்தை நான் படித்து பார்த்துள்ளேனா என்றால் படித்து பார்த்துள்ளேன். அந்த ஒரு ஏக்கர் சொத்தானது புல எண்.30ல் அடங்கியுள்ளது என்றால் சரிதான். மேற்படி சொத்தை தவிர வேறு என்ன சொத்து உள்ளது என்று வழக்கில் பாகம் கேட்டுள்ளேன் என்றால் 1950ல் வாங்கப்பட்ட சொத்தில் மட்டும்தான் பாகம் கேட்டுள்ளேன். மேற்படி சொத்தில் எந்த அடிப்படையில் நான்கில் ஒரு பாகம் பங்கு கேட்கிறேன் என்றால் என்னுடைய தாத்தா திருவேங்கத்தின் உடன் பிறந்த சகோதரர் தேவன் என்பவர் சிறுவயதிலேயே இறந்துவிட்டார், அதன் பிறகு வாரிசுதாரர்களான ராமசந்திரன், திருவேங்கடம், சுந்தரமூர்த்தி, நாகலிங்கம் ஆகியோர்கள் என்பதால் அதன் அடிப்படையில் நான் நான்கில் ஒரு பாகம் வழக்கில் கேட்டுள்ளேன். ராமசந்திரன் எப்பொழுது இறந்தார் என்றால் ஞாபகமில்லை. மற்ற பாகஸ்தரர்களான திருவேங்கடம், சுந்தரமூர்த்தி, நாகலிங்கம் ஆகியோர்கள் எப்பொழுது இறந்தார்கள் என்றால் வருடம் ஞாபகமில்லை. மற்ற பாகஸ்தர்களின் வாரிசுதார்களை இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்த்துள்ளேனா என்றால் சேர்த்துள்ளேன். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னர் பாகம் பிரித்துக்கொள்வதாக அறிவிப்பு எதுவும் அனுப்பினோமா என்றால் அறிவிப்பு அனுப்பியுள்ளோம். வா.சா.ஆ.9-ல் மற்ற பாகஸ்தர்களுக்கு பாகம் பிரித்து கொள்ளலாம் என்று அறிவிப்பு கொடுத்துள்ளேன். ஒரு பாகஸ்தரான சுந்தரமூர்த்தியின் மகள்தான் செல்வி.

**(9ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)**

<u>9ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>:-

வா.சா.ஆ.1 கிரயமானது யார், யாரிடமிருந்து பெறப்பட்ட ஆவணம் என்றால் என் அம்மா வழி எனது தாத்தாவாகிய திருவேங்கடம் பெயரில் வாங்கப்பட்டதாகும். வா.சா.ஆ.1 ஆவணத்தில் யார், யார் கூட்டு உரிமையாளர்கள் என்றால் வா.சா.ஆ.1 ஆவணத்தை சாட்சி பார்த்து, என் தாத்தா திருவேங்கடத்தின் பெயர் இல்லை என்று கூறுகிறார். வா.சா.ஆ.1 ஆவணத்தில் நடேசன் முதலியாரின் வாரிசுகளின பெயர்களில் ராமசந்திர முதலியார் பெயர் மட்டும் கண்டுள்ளது என்றால் சரிதான். அவர்களுக்கும், எங்களுக்கும் சம்பந்தம் இல்லை. நடேசன் முதலியாருக்கு ராமசந்திரன், சுந்தரமூர்த்தி, நாகலிங்கம், திருவேங்கடம், தேவன் ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் சரிதான். மேற்படி ராமசந்திரனும் 7 நபர்களும் சொத்துக்களை எப்பொழுது பிரித்து கொண்டார்கள் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. ராமசந்திர முதலியாருக்கு என்ன சர்வே நம்பருக்கான சொத்து ஒதுக்கப்பட்டது என்றால் சர்வே எண்.30/6ஏ-வில் 36 சென்ட் சொத்தானது ராமசந்திரன், மற்றும் சுந்தரமூர்த்திக்கு ஒதுக்கப்பட்டது. சர்வே எண்.30/6பி-வில் 35 சென்ட் திருவேங்கடம் மற்றும் நாகலிங்கத்திற்கு ஒதுக்கப்பட்டது. சர்வே எண்.30/6எப்-ல் 29 சென்ட் சொத்தானது மேற்படி 4 நபர்களுக்கு ஒதுக்கப்பட்டது. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.2, வா.சா.ஆ.3 பட்டா மற்றும் சிட்டாவில் எங்களுடைய பெயரும் உள்ளதால் எங்களுக்கு பாத்தியப்பட்டது என்று கோருவதால் பட்டா, சிட்டாவில் எங்களுடைய பெயர் சுழிக்கப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு சுழிக்கப்பட்டது குறித்து எனக்கு தெரியாது. வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.3ல் நாகலிங்கம் மற்றும் சுந்தரமூர்த்தி பெயர் இல்லை என்று வருவாய் துறையை அனுகி மனு ஏதும் கொடுத்தேனா என்றால் ராமசந்திரன் குடும்பத்தில் பெரியவர் என்பதால் அவரது பெயரில் பட்டா வந்தது.

<u>(9ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)</u>

9ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-

நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.4 அடங்கல் யார் பெயரில் உள்ளது என்றால் ராமசந்திரன் வகையறா என்றும், திருவேங்கடம் வகையறா என்றும் உள்ளது. வா.சா.ஆ.4 அடங்கலில் நடேசன் முதலியாரின் இதர வாரிசுகள் பெயர்கள் இல்லை என்றால் இருக்கிறது. வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் வில்லங்க சான்றிதழ் தாக்கல் செய்தேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. வழக்கு சொத்தில் வில்லங்கம் எதுவும் ஏற்படவில்லை என்பதை காண்பிக்க ஏன் வில்லங்க சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் அது என் அம்மாவிற்குதான் தெரியும். சர்வே எண்.30/6F சொத்தானது எங்கள் கூட்டுஉடைமையில் இருக்கிறது என்பதை காண்பிக்க எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் கூட்டு பட்டா தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்தானது ரொம்ப காலத்திற்கு முன்பே சுந்தரமூர்த்தி வகையறாவிற்கு தனிஉடைமையில் போய் விட்டது என்றால் சரியல்ல, கூட்டு உடைமையில்தான் உள்ளது. தற்போதுவரை பிரிக்கவில்லை. சுந்தரமூர்த்தியின் மகன்தான் நீலகண்டன் என்றால் சரிதான். நீலகண்டனின் மனைவிதான் அம்பிகா என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே சர்வே எண்.30/6F சொத்தானது அம்பிகாவின் பெயரில் நீலகண்டன் செட்டில்மெண்ட் எழுதி வைத்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. அதன் ஒரு பகுதியைதான் 9ம் பிரதிவாதி கிரயம் வாங்கியுள்ளார் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. இந்த வழக்கில் எதிர் வழக்குரை தாக்கல் செய்த பிறகு கூட 17.9.2009 அன்று ஏற்படுத்தப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணம் குறித்தும், 9ம் பிரதிவாதிக்கு செய்யப்பட்ட கிரயபத்திரம் குறித்தும் ஆட்சேபனை செய்யவில்லை என்றால் என் அம்மா ஏன் ஆட்சேபனை செய்யவில்லை என்று எனக்கு தெரியவில்லை. இந்த வழக்கில் 9ம் பிரதிவாதியை ஏன் சேர்த்துள்ளார்கள் என்று தெரிந்து கொண்டேனா என்றால் கூட்டுபட்டாவாக இருந்ததால் நான்கு பாகமாக பிரிக்க வேண்டும் என்பதால் 9ம்

பிரதிவாதி வழக்கில் சேர்த்துள்ளார்கள். சர்வே எண்.30/6F சொத்திற்கான பட்டா 9ம் பிரதிவாதிக்கு சென்றுவிட்ட விவரம் குறித்து தெரியுமா என்றால் தெரியாது. சர்வே எண்.30/6F சொத்தானது 9ம் பிரதிவாதியின் தனிப்பட்ட அனுபவத்தில் உள்ளது என்றால் எனக்கு அது குறித்து தெரியவில்லை. 2004 முதல் 20 வருடங்களாக 9ம் பிரதிவாதியின் தனிப்பட்ட அனுபவத்தில் சர்வே எண்.30/6F சொத்து இருந்ததால்தான் அவர் பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்ற விவரம் தெரிந்துதான் கிரய பத்திரம் மற்றும் வருவாய் துறை ஆவணங்கள் மாற்றம் செய்யப்பட்டுள்ளது குறித்து எந்த பரிகாரமும் கேட்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் வழக்கில் கோரியுள்ள பாகப்பிரிவினை எங்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் தவறாகும். 1992ம் வருடத்திலேயே சுந்தரமூர்த்தி இறந்துவிட்டார் என்றும், அப்பொழுது சுந்தரமூர்த்தி வகையறாவிற்கு சொத்துக்கள் ஒதுக்கப்பட்டது என்றும், சுந்தரமூர்த்தி அவர் காலம்வரை அனுபவித்து வந்து, அதன் பிறகு நீலகண்டன் 2003ல் அம்பிகா பெயரில் செட்டில்மெண்ட் எழுதி வைக்கும் காலம் வரை அனுபவித்து வந்து, அதன் பிறகு அம்பிகாவிடமிருந்து 9ம் பிரதிவாதி டிசம்பர் 2004ல் கிரயம் பெற்ற நாள் முதல் அவருடைய அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள எந்த பரிகாரமும் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

<u>10 முதல் 14 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-

(10 முதல் 14 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

O.S.372/2006 P.W.2-பிரபாவதி 29.02.2024

**11 முதல் 14 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-**

8வது பிரதிவாதி நாகலிங்கம், நடேசமுதலியார் மற்றும் அபூர்வம்மாள் ஆகியோரின் மகன் என்றால் சரிதான். 8வது பிரதிவாதி நாகலிங்கம் என் தாயார் சரசுவின் அப்பா திருவேங்கடத்தின் உடன் பிறந்த சகோதரர் என்றால் சரிதான். தாவா சொத்து நாகலிங்கம், திருவேங்கடம், ராமசந்திரன், சுந்தரமூர்த்தி ஆகியோரின் கூட்டு குடும்ப சொத்து என்றால் ஆமாம். தாவா சொத்திற்கு மேற்படி நான்கு நபர்களின் பெயரிலும் கூட்டு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து கூட்டு குடும்ப சொத்து என்பதால் 8வது பிரதிவாதிக்கு நான்கில் ஒரு பாகம் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். தாவா சொத்துக்களில் 8வது பிரதிவாதிக்கு நான்கில் ஒரு பாகம் பாத்தியப்பட்டது என்று நீதிமன்ற கட்டணம் செலுத்தியுள்ளார் என்றால் சரிதான். வழக்கு நிலுவையில் இருக்கும்போது 8வது பிரதிவாதி இறந்துவிட்டார் என்றால் சரிதான். 8வது பிரதிவாதியின் வாரிசுகள்தான் 10 முதல் 14 வாரிசுகள் என்றால் சரிதான். 8வது பிரதிவாதியின் மனைவி 10வது பிரதிவாதி தற்போது இறந்துவிட்டார் என்றால் சரிதான். 8வது பிரதிவாதி இறந்துவிட்டதால் அவருடைய நான்கில் ஒரு பாகமானது அவருடைய வாரிசுகளான 11 முதல் 14 பிரதிவாதிகளுக்கு கிடைக்கக்கூடியது என்றால் சரிதான்.

**மறு விசாரணை**

இல்லை